1970 பிப்ரவரி 28]

இருக்கிறதா? உயர்திரு. ம. பொ. சி. அவர்கள்கூட இதிலே இருக்கிருர் என்று செய்தி வந்ததே, அது இந்தக் குழுவா? அல்லது வேறு குழுவா?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : இது குழு அல்ல. சிறப்பு அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டார் என்பதிலிருந்தே இது குழு அல்ல என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்ருகத் தெரியும் என்று கருதுகிறேன். போலீஸ் கமிஷன் என்பது வேறு. அதில்தான் திரு. ம. பொ.சி. அவர்கள் இடம் பெற்றிருக்கிருர்கள்.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : காவல் துறையில் இருக்கும் பணியாளர்களுக்கும் போலீஸ்காரர்களுக்கும் 1923-ம் ஆண்டிலிருந்து தினப்படி ரூ. 1-25 என்றே இருந்து வருகிறது. அதை உயர்த்துவதற்கு அரசு பரிசிலனே செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : போலீஸ் கமிஷனுடைய அறிக்கைக்குப்பிறகு எல்லாவற்றையும்பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. கே. விநயகம் : இப்பொழுது செய்யப்பட்டிருக்கிற சிபார்சுகளின் விளைவாக, ஏற்கனவே இருக்கிற செலவைவிட அரசாங்கத்திற்குக் கூடுதல் செலவு ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : அதற்கான விவரம் இல்லை.

திரு. கே. சகாதேவக் கண்டர் : போலீஸ்காரர்களுக்குக் கொடுக்கப்படும் தினப்படி ரூ. 1.25 என்று இருக்கிறது. இதுவும் மாவட்டந்தோறும் மாறுபட்டதாக இருக்கிறது. மேலும், மாதம் முப்பது நாட்களும் 'டூர்' சென்ருல் 20 நாட்களுக்குத்தான் பாட்டா கொடுக்கப்படுகிறது, மற்ற பத்து நாட்களுக்கு பாட்டா கொடுக்கப்படவில்லை என்ற புகார் இருக்கிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : அது புகார் என்று கேள்வியிலேயே கூறுகிருர்கள். உண்மையாக இருக்குமானல், அதை எழுதியனுப்பினல், கவனிக்கப்படும்.

கீழக்கரையில் கைப்பற்றப்பட்ட கள்ள நோட்டுகள்

■131 **வின—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடையளிப்பாரா—

19--9--1968 வாக்கில் இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் 10 ரூபாய் பிரிவில் கள்ள நோட்டுகள் கைப்பற்றப்பட்டனவா?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : ஆம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, அது சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? அத்துடன், நம்முடைய பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் கொலை பாதகச் செயலைச்

[1970 பிப்ரவரி 28

செய்யும் அத்தகைய சமூக விரோதிகளுக்கு விதிக்கப்படும் தண்டனையைக் கடுமையாக்க அரசாங்கம் ஏதாவது சட்டம் கொண்டுவருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்த வழக்கைப் பொறுத்த வரையில் ஆறு பேர்கள் அதிலே பிடிபட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது வழக்குப் போடப்பட்டு, அந்த வழக்கு இராமனாதபுரம் நீதித் துறைக் குற்ற விசாரணை உதவி நீதிபதியின் விசாரணை முடிவுற்று, இப்பொழுது சிவகங்கை உதவி செஷன்ஸ் நீதிபதி அவர்கள் முன்னிலையில் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இப்படிப் பட்ட குற்றங்கள், இந்தியாவில் நம்முடைய மாநிலத்தில் அதிகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்குரிய காரணம் என்ன என்று ஆராயப்பட்டு இந்தியாவின் வட பகுதியில் இருக்கும் மாநிலங்களில் பணம் சம்பாதிக்கவேண்டும் என்பதற்காக முரட்டுத் தனமான நடவடிக்கைகளைக் கையாண்டு பிறருடைய பணத்தைப் பறிக்கின்ற வழிப்பறி போன்ற காரியங்களில் சிலர் ஈடுபட்டிருக் கிறார்கள் என்றும், இங்கேயுள்ளவர்கள் முரட்டுத்தனத்தில் ஈடுபடா மல் மூளையை உபயோகித்து இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடு கிறார்கள் என்றும் ஒரு ஆய்வு அறிக்கை கூறுகிறது. ஆகவே, தண்டனையை இன்னும் கடுமையாக்குவதற்கு, தண்டனைமூலம் அதை ஒடுக்குவதற்கு உற்ற வழிகள் ஏதாவது காண முடியுமா என்று சட்டத் துறையின் மூலமாக ஆராயப்பட வேண்டும்.

திரு. சோ. கருணைநாதன்: தலைவர் அவர்களே, கள்ள நோட்டு அச்சடித்த இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டனவா? அவை எந்த நாட்டைச் சேர்ந்தவை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அந்த இயந்திரங்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவை, விலாசம் என்ன என்பதெல்லாம் எனக்குத் தெரியாது.

THIRU T. MARTIN: May I request the Hon. Chief Minister to state whether the circulation of counterfeit currency has increased recently on account of the fact that it has been smuggled into this State from Kerala and if so, whether the Police will have a separate force in the C.I.D. to detect that kind of smuggling of counterfeit notes into this State?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இத்தகைய குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடு வதைப்போல, போலீஸ் இலாகாவில் ஒரு தனிப்பிரிவை ஏற்படுத்த வேண்டும் என்று இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அவர்களிடமிருந்து ஒரு குறிப்பு வந்திருக்கிறது. அந்தத் தனி இலாக்காவை ஏற்படுத்துவது பற்றி, அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, இந்தக் கள்ள நோட்டு அடிக்கும் வழக்கம் தமிழ்நாட்டில் அதிகரித்துக்கொண்டு வருவதால், சமுதாயத்தில் ஏற்கனவே மிக அந்தஸ்தில் உள்ள பணக்

1970 பிப்ரவரி 28]

காரர்கள்தான் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறேர்களோ என்ற ஐயப்பாடு தமிழ்நாட்டில் அதிகமாகி இருக்கிறது. அதுபற்றி அரசுக்கு ஏதாவது தகவல் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : அப்படி யார் யார் இருக்கிறுர்கள் என்பதை உறுப்பினர்களைப் போன்றவர்கள் தெரிவிப்பார்களாளுல் காவல் துறைக்கு அவைகள்கூட உதவியாக இருக்கும்.

திரு. பெ. மலேச்சாமி : தலைவரவர்களே, இந்தக் கள்ளநோட்டு அடிப்பவர்கள்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளுக்குத் தூக்குத் தண்டனை அளிக்கச் சர்க்கார் வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : இப்பொழுது உள்ள சட்டத்தின்படி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. எம். சுரேந்திரன் : சார், கள்ளநோட்டு தயாரிப்பவர்கள் கள்ளநோட்டுக்கான காகிதங்களை வெளிநாடுகளிலிருந்து கொண்டு வந்துதான் செய்கிறுர்கள் என்று சொல்லப்படுகிறதே, அதற்கு உள் நாட்டுக் காகிதங்கள் பயன்படுகின்றனவா? அப்படி வெளிநாடுகளிலிருந்து கொண்டுவருகிறுர்கள் என்றல் அதற்கான சாத்தியக் கூறுகள் என்ன, எங்கே இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : இதில் எல்லாமே கள்ளத்தனமாகத்தான் நடக்கிறது.

யேல் பல்கலைக்கழகத்துக்குக் கொடுக்கப்பட்ட பழமையான ஆவணம்.

* 132 வினு—**திரு. டி. மார்டின் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமெரிக்காவிலுள்ள யேல் பல்கலைக்கழகத்திற்குத் தமிழக அரசினிடம் இருந்து வந்த புராதன Record ஏதேனும் காலம் சென்ற முதல் அமைச்சர் கொடுத்தார்களா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : (அ) ஆம்.

(இ) அமெரிக்காவில் உள்ள யேல் பல்கலைக் கழகத்தின் 250-வது ஆண்டு விழாவின் தொடர்பாக, " 1692-ம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனியின் நாட் குறிப்பேடும் ஆலோசனைக் குறிப்புப் புத்தகமும் " என்ற பழமையான மூல ஆவணம் மாநில ஆவணக் களரியிலிருந்து அந்தப் பல்கலைக் கழகத்திற்குக் கடனுக அளிக்கப் பட்டது.

THIRU T. MARTIN : Persons who are engaged in research work in this State may like to refer to ancient documents like this. Therefore, may I request the Hon. Chief Minister to state